செய்தி வெளியீட்டு எண்.98 நாள்.15.02.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில் புள்ளி விவர ஒருங்கிணைப்பாளருக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.**

~~~~~

திருவள்ளூர் மாவட்ட புள்ளிஇயல் துணை இயக்குநர் அலுவலகத்தில் காலியாகவுள்ள புள்ளி விவர ஒருங்கிணைப்பாளருக்கான (Data coordinator) இரண்டு பணியிடங்களுக்கு, மாதம் ஒன்றுக்கு தொகுப்பூதியம் ரூ.15,000/- (இதர படிகள் ஏதும் வழங்கப்படமாட்டாது) மட்டும் வழங்கப்படும். பணியிடங்கள் கேள்வித்தாள்களை வைத்து தேர்வு நடத்தி நேர்காணல் மூலம் முற்றிலும் பொது போட்டி (General) – 1 (பதவி) மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியினர்) (Scheduled Caste(A)) - 1 (பதவி) அடிப்படையில் நிரப்பப்பட உள்ளது. இதற்காக பின்வரும் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் (1)பொது பிரிவு மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியினர்) ஆக இருக்க வேண்டும். (2) தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். (3) வயது வரம்பு 1.7.2015 அன்றைய நிலையில் 35 வயதிற்கு மிகாமல் (அரசு விதிகளின்படி) இருக்க வேண்டும். (4)கல்வி தகுதி ஏதாவது ஒரு பாடத்தில் பட்டப்படிப்பு மற்றும் கணினியில் டிப்ளோமா அல்லது சான்றிதழ் படிப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இப்பணி முற்றிலும் தற்காலிகமானது.

மேற்படி தகுதிகளுடன் புள்ளிவிவர ஒருங்கிணைப்பாளர் பதவியில் பணிபுரிய விருப்பமுள்ளவர்கள் (1)பெயர் (2)தகப்பனார் பெயர் (3)பாலினம் (4)பிறந்த தேதி (5)அஞ்சல் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) (6)கல்வி தகுதி (7)சாதி ஆகிய விவரங்களுடன் கீழ்குறிப்பிட்ட திருவள்ளூர் மாவட்ட புள்ளிஇயல் துணை இயக்குநர் அலுவலகத்தில் 28.02.2017 பிற்பகல் 5.00 மணிக்குள் கிடைக்கும் வகையில் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு மாவட்ட புள்ளிஇயல் துணை இயக்குநர் அலுவலகம், திருத்தணி ரோடு, டோல்கேட் அருகில், திருவள்ளுர்-602001. என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~